Registered as a NewsPaper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம்: 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | பங்குனி 04 | ( 17 - 03 - 1992 ) | செவ்வாய்க்கிழமை | ஓசை: 28

## 'எயிட்ஸ்' ரத்தத்தினால் மருத்துவ தாதி மரணம்

ஐந்து வருடங்களுக்கு முன்னர் எய்ட்ஸ் நோயாளி ஒருவரின் இரத்தம் பட்டதனால் இத்தாலிய தாதி ஒருவர் கடந்த வாரம் இறந்து விட்டதாக அன்சா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. புருனாபெடெலி என்ற இத் தாதி எயிட்ஸ் நோயாளியை படுக்கையில் வைத்துக்கொண்டு செல்கையில் கருவியொன்று விட்டுக் கொடுத்ததால் நோயாளியின் ஒரு துளி இரத்தம் தாதியின் கண்ணில் பட்டது அதுவே அவரின் மரணத்திற்கு காரணமாகியது. முகமூடியோ, கையுறையோ தாதி பாதுகாப்பாக அணியத்தவறி விட்டார் கருவி உற்பத்தி செய்தவர்களும் ஆஸ்பத்திரி மேற்பார்வைக் குழுவினரும் தண்டனைகுள்ளாகினர்.

# வடமராட்சி மீது முப்படை தாக்குதல்

# கரையோர பகுதியில் கோர குண்டுவீச்சு

## பலர் காயம்; பல வீடுகள் நாசம்

(நமது நிருபர்)

வடமராட்சி மீது சிறிலங்காவின் முப்படைகளும் நேற்றுக் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத்தாக்குதலை நடத்தின. விமானப் படை விமானங்களில் இருந்து குண்டு வீசப்பட்ட அதேநேரம் கடற்படை பீரங்கிகளில் இருந்தும் குண்டுமாரி பொழியப்பட்டது. இராணுவத்தினரும் தமது பங்கிற்கு இடையிடை எறிகணைத் தாக்குதலை நடாத்தினர். இக் குண்டு வீச்சில் எட்டுப்பேர் காயமடைந்தனர். பொதுமக்களின் பல லட்சம் பெறுமதியான சொத்துக்கள் நாசமாயின. பதினைந்திற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

(நமது நிருபர்)

நேற்றுக் காலை ஆறு மணி முதல் பதினொரு மணிவரை பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு பகுதிகளை குறியாகக் கொண்டு நான்கு பொம்மர்கள் இரண்டு அவ்ரோ இரண்டு உலங்குவானூர்திகள் சீபிளேன் ஆகியனபதினெட்டுக்கு மேற்பட்ட குண்டுகளை வீசின இத்தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த அதேவேளை இப்பகுதிகளை நோக்கி வீரசூரியா, நான்கு விசைப்படகுகள், தாய்க்கப்பல் ஒன்று ஆகியவற்றிலிருந்து ஒரே நேரத்தில் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன,

இத்தாக்குதல்களினால் பதினைந்திற்கு மேற்பட்ட வீடுகள், இரண்டு கடைகள், மூன்று வாகனங்கள், பல தென்னைமரங்கள் ஆகியன பலத்த சேதமடைந்தன.

பருத்தித்துறை முனைப்பகுதியை காலை ஆறு மணிக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முத்தமிழ்விழா நாடகங்கள் குறித்து அறிவுறுத்தல்

(நமது நிருபர்)

தமிழீழத்தின் பல பாகங்களிலும் தொடர்ச்சியாக பத்து நாட்கள் இடம்பெறவிருக்கும் முத்தமிழ் விழாவில் சென்ற வருடத்தைப் போல சிறந்த பல நாடகங்களை மேடையேற்றுவதற்காக நாடகத்துறை சம்பந்தமான விழாக்குழுவினர் அதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேடையேறவிருக்கும் நாடகங்கள் பற்றிய சில முடிவுகளை, கோண்டாவிலில் அமைந்துள்ள விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் முத்தமிழ்விழா அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடிய நாடகத்துறை சம்பந்தமான குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

இக் குழுவினரின் முடிவுகளின்படி மேடையேற்றப்படவிருக்கும் நாடகங்கள் மரபுவழி நாடகங்கள், மரபுவழி சாராத நாடகங்கள் என இரு பிரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கூத்து விலாசம் போன்றவை மரபுவழி நாடகங்கள் என்ற பிரிவில் இடம் பெற்றுள்ளன.

மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆடப்பட்டுவரும் வடமோடி, தென்மோடி கூத்து

[4ஆம் பக்கம் பார்க்க]

## தமிழீழக் கல்வி மேம்பாட்டு பேரவை உதயம்

தமிழீழக் கல்வியாளர்களையும், சமூக விருத்திக்கான முயற்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்டோரையும் உள்ளடக்கியதாக அண்மையில் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை உருவாகியுள்ளது

தமிழீழ மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக உழைத்தல், மாணவர்களின் கல்வி நலன்களுக்காக வளங்களின் உச்சப் பயன்பாட்டைப் பெறுதல், ஆசிரியர்களின் ஆளுமையை விருத்தி செய்தல் ஆகியன இப்பேரவையின் முக்கிய நோக்கங்களாகும்.

## வடமராட்சியில் குண்டுவீச்சு மக்கள் இடம்பெயர்வு

வடமராட்சி மீது சிறிலங்கா விமானப்படையினதும் கடற்படையினதும் கண்மூடித்தனமான தாக்குதல்களைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, பருத்தித்துறை பகுதிகளிலிருந்து பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தமது குடியிருப்புகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்தவண்ணமுள்ளனர்.

இதில் வல்வெட்டித்துறையிலிருந்து எண்ணாயிரத்திற்கு மேற்பட்ட மக்களும் தொண்டமனாறிலிருந்து இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்களும் அகதிகளாகியுள்ளனர். இவர்கள் சுப்பர் மடம், நவிண்டில், மீசாலை பகுதிகளை நோக்கி கால்நடையாகவும், சைக்கிள்களிலும் சென்றவண்ணமுள்ளனர்.

[4ஆம் பக்கம் பார்க்க]

## பிரபாகரன் வரலாம் நீதிபதி வருவாரா?

[சென்னை]

தமிழ் நாடு வன்னியர் இயக்கத் தலைவர்களில் ஒருவரான பண்ருட்டி இராமச்சந்திரன் அண்மையில் சென்னையில் நடைபெற்றகூட்டம் ஒன்றில் பேசுகையில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு பிடி ஆணை விடுக்கப்பட்டது குறித்துஜெயலலிதா அரசைக் கிண்டல் செய்தார்.

பிரபாகரன் நினைத்தால், சென்னை நீதிமன்றத்திற்கு வரலாம் ஆனால், நீதிபதி வருவாரா என்பது சந்தேகத்திற்குரியதே என்று கிண்டல் பண்ணிய போது கூட்டத்தில் இருந்து பெரும் ஆரவாரம் எழுந்தது

## இன்றும் அகதிகள் வருவர்

[சென்னை]

தமிழ்நாட்டிலிருந்து மேலும் ஒரு தொகுதி அகதிகள் இன்று இலங்கை திரும்புகின்றனர். இவர்கள் இன்று காலை திருகோணமலைக்கு வந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

## மறுமலர்ச்சிக் கழகத்தின் 12 ஆண்டு நிறைவு

யாழ்.பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவு விழா நேற்று பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சிறப்புற நடைபெற்றது இந்த விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலா

கழக துணைவேந்தர் பேராசிரியர் திரு. துரைராஜா பேராசிரியர் திரு பாலசுந்தரம், ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

உள்நாட்டு வெளிநாட்டு பரிமாணங்களும் அரசியல்

# தலைவர் பிரபாவுக்கும் புலிகளுக்கும்

மேடையேறவிருக்கும் நாடகங்கள் பற்றிய சில முடிவுகளை, கோண்டாவிலில் அமைந்துள்ள விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் முத்தமிழ்விழா அலுவலகத்

கங்கள் என்ற பிரிவில் இடம் பெற்றுள்ளன.

மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆடப்பட்டுவரும் வடமோடி, தென்மோடி கூத்து

[4ஆம் பக்கம் பார்க்க]

## தமிழீழக் கல்வி மேம்பாட்டு பேரவை உதயம்

தமிழீழக் கல்வியாளர்களையும், சமூக விருத்திக்கான முயற்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்டோரையும் உள்ளடக்கியதாக அண்மையில் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை உருவாகியுள்ளது

தமிழீழ மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக உழைத்தல், மாணவர்களின் கல்வி நலன்களுக்காக வளங்களின் உச்சப் பயன்பாட்டைப் பெறுதல், ஆசிரியர்களின் ஆளுமையை விருத்தி செய்தல் ஆகியன இப்பேரவையின் முக்கிய நோக்கங்களாகும்.

துறை, தொண்டமனாறு பகுதி

## வடமராட்சியில் குண்டுவீச்சு மக்கள் இடம்பெயர்வு

வடமராட்சி மீது சிறிலங்கா விமானப்படையினதும் கடற்படையினதும் கண்மூடித்தனமான தாக்குதல்களைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, பருத்தித்துறை பகுதிகளிலிருந்து பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தமது குடியிருப்புகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்தவண்ணமுள்ளனர்.

இதில் வல்வெட்டித்துறையிலிருந்து எண்ணாயிரத்திற்கு மேற்பட்ட மக்களும் தொண்டமனாறிலிருந்து இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்களும் அகதிகளாகியுள்ளனர். இவர்கள் சுப்பர் மடம், நவிண்டில், மீசாலை பகுதிகளை நோக்கி கால்நடையாகவும், சைக்கிள்களிலும் சென்றவண்ணமுள்ளனர்.

[4ஆம் பக்கம் பார்க்க]

பதினைந்திற்கு மேற்பட்ட வீடுகள், இரண்டு கடைகள், மூன்று வாகனங்கள், பல தென்னைமரங்கள் ஆகியன பலத்த சேதமடைந்தன.

பருத்தித்துறை முனைப்பகுதியை காலை ஆறு மணிக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

[சென்னை]

தமிழ்நாட்டிலிருந்து மேலும் ஒரு தொகுதி அகதிகள் இன்று இலங்கை திரும்புகின்றனர். இவர்கள் இன்று காலை திருகோணமலைக்கு வந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கப் பட்டது.

## மறுமலர்ச்சிக் கழகத்தின் 12 ஆண்டு நிறைவு

யாழ்.பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகத்தின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவு விழா நேற்று பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சிறப்புற நடைபெற்றது இந்த விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு யோகி, பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் திரு. துரைராஜா பேராசிரியர் திரு பாலசுந்தரம், ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

'உள்நாட்டு வெளிநாட்டு பரிமாணங்களும் அரசியல் நிலைவாழும்'' என்ற தலைப்பில் திரு. மு. திருநாவுக்கரசு அவர்களது கருத்துரையும் இடம் பெற்றது.

# தலைவர் பிரபாவுக்கும் புலிகளுக்கும் தமிழ் நாட்டில் பெருகிவரும் ஆதரவு

## ஜெயலலிதா அரசு அச்சம்

(நமது நிருபர்)

தமிழ் நாட்டில் பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் ஆதரவு திரண்டு வருவதாகவும், இதனால் ஜெயலலிதா அரசு கிலி கொண்டு புலிகள் இயக்கத்தை தடைசெய்யுமாறு மத்திய அரசை வலியுறுத்தி வருவதாகவும் சென்னை அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகைகள் செய்திகளைப் பிரசுரித்துள்ளன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டத்தை மையமாக வைத்து தமிழ் நாட்டில் தமிழ்த் தேசியவாத எழுச்சியை தூண்டிவிடுவதற்கு பல்வேறு தமிழக அரசியல் அமைப்புகள் முயற்சித்து வருவதாகவும் இதனால் தமிழ் நாட்டில் பிரிவினைவாதம் தலைதூக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் இந்தப் பத்திரிகைச் செய்திகளில் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் சென்னையில் விடுதலைக் குயில்கள் எனப்படும் அமைப்பு தமிழர் ஒருமைப்பாட்டு மாநாடு ஒன்றை கூட்ட முயற்சித்த பொழுது திரு. நெடுமாறனும் மற்றும் 70 புலிகளின் ஆதரவாளர்களும் கைதுசெய்யப்பட்ட சம்பவத்தை குறிப்பிட்ட 'ஐலன்ட்' வார இதழ், ''தமிழ்த் தேசியவாத இயக்கத்தின் உண்மையான பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்பதையும் உலகத் தமிழினத்தின் தலைவர்களும் அவர்களே என்பதையும் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தும் நோக்குடனேயே இம்மாநாடு கூட்டப்பட்டது'' எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

இருபதிற்கும் மேற்பட்ட தமிழ் நாட்டு தேசியவாத அரசியல் இயக்கங்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளித்து வருவதாகவும் புலிகளின் ஆதரவாளர்களை பரவலாக கைதுசெய்தபோதும் புலிகளுக்கான ஆதரவு மேலோங்கி வருவதாகவும் இந்த செய்தி அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சமீபத்தில் தமிழக நக்சல்பாரி இயக்கமும் மற்றும் தலைமறை



வான பல தீவிரவாத சக்திகளும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயல்பட்டுவருவதாகவும், புலிகளைப் பின்பற்றி ஆயுதப் போராட்டம் மூலம் தமிழ் நாட்டில் தனியரசு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்திவருவதாகவும் மேலும் இந்த அறிக்கையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு கற்பிக்கப்போய் பாடம் கற்றுக்கொண்டது யார்?

### இந்திய ஜெனரல் விளக்குகிறார்

[கொழும்பு]

தமிழீழத்தில் இந்திய அமைதிப் படையின் அனுபவங்கள் குறித்து இரு இந்திய தளபதிகள் இரு நூல்களை வெளியிட்டுள்ளார்கள். 'சிறிலங்காவில் இந்திய அமைதிப்படை' என்ற நூலை லெப். ஜெனரல் திபேந்தர் சிங்கும், 'யாழ்ப்பாண கடைப்பாடு' என்ற மற்றுமொரு நூலை லெப். ஜெனரல் சர்தேஸ்பாண்டேயும் பிரசுரித்துள்ளனர்.

இந்த இரு நூல்களும் வடகிழக்கு பிரதேசத்தில் இந்திய இராணுவத்தின் சிக்கலான, கஷ்டமான அனுபவங்களையும் இராணுவ தலைமைப்பீடத்திற்கும், இந்திய அரசியல் தலைமைக்கும் மத்தியில் எழுந்த முரண்பாடுகளையும் விபரிக்கின்றன. இந்திய புலனாய்வுத் துறையான றோவின் ஆலோசனையின் பேரில் இந்திய அரசியல் தலைவர்கள் மேற்கொண்ட தவறுதலான அணுகுமுறை காரணமாக இந்திய இராணுவம் தோல்விகளைச் சந்தித்து அவமானத்திற்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாக இந்த தளபதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த யுத்தத்தின் தாற்பரியங்கள் பற்றி சாதாரண இந்திய மக்கள் அறிந்திருக்கவில்லை என்றும் இந்தப்போரினால் எழுந்த விளைவுகளுக்கு அரசியல் அதிகார அமைப்பே பொறுப்பேற்க வேண்டுமென்றும் ஜெனரல் திபேந்தர்சிங் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்திய

[4ஆம் பக்கம் பார்க்க]

### தீபாவளி மே-21

[சென்னை]

திராவிட இயக்கத்தைச் சேர்ந்த பிரபல பேச்சாளர் ஒருவர் அண்மையில் மதுரையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசும்போது மே - 21 ஆம் திகதியை தீபாவளி தினமாக பிரகடனம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

ராஜீவ் காந்தி மரணமடைந்த மே-21 ஆம் திகதி திராவிட இனத்தினர் பட்டாசு கொழுத்திக்கொண்டாட வேண்டிய தினம் எனவும் அவர் தெரிவித்தார்.

வடமராட்சி

## வீதி நடவடிக்கைகளில் தமிழீழ காவல் துறையினர்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியிலும் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளை தமிழீழக் காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

வீதி ஒழுங்கு விதிகளை அனுசரித்து நடக்குமாறு சைக்கிளோட்டிகள், மற்றைய வாகனமோட்டிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த சில நாட்களில் வீதி ஒழுங்கை மீறி நடந்து கொண்ட சைக்கிளோட்டிகள், மற்றும் வாகனமோட்டிகளிடம் அந்த இடத்திலேயே வைத்தே குற்றப்பணம் அறவிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. (25)

## ஆறு தமிழ்ச் சிறுவர்கள் மட்டக்களப்பில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் 14 - 15 வயதுடைய ஆறு தமிழ்ச் சிறுவர்கள் கைது செய்யப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலை சுற்றிவளைப்பு; ஒருவர் சூட்டிற்குப் பலி

பேசாலை கடைத்தெருப் பகுதியில கடந்த ஞாயிற்றுக் கிழமை இராணுவத்தினர் சுற்றிவளைத்து தேடுதல்நடத்தினர். இந்த தேடுதலின் போது சின்னத்தம்பி தேவிட் என்பவர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## காவலரண் மீது தாக்குதல்; 1 படை பலி; வெடிப் பொருள் மீட்பு

(மணலாறு)

மணலாறு சிலோன் தியேட்டர் இராணுவ முகாம் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஓர் இராணுவச்சிப்பாய் பலியானார். பல வெடிப்பொருள்கள் இராணுவ உபகரணங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இந்த தாக்குதல் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. இந்தகாவலரண்சிலோன் தியேட்டர் முகாமிலிருந்து 600 யார் தூரத்தில் அமைந்துள்ளது இந்த காவலில் ஈடுபட்டிருந்த ஏனைய சிறிலங்கா இராணுவத்தினர் முகாம்பகுதிகளுக்கு ஓடிவிட்டனர்.

இந்த காவலரணிலிருந்து ரி-56 ரக துப்பாக்கிக்குரிய ரவைக்கூடுகள் -12, நடுத்தர ரவைகள் 1460, தெ'டர் ரவைகள்-30, ஜே ஆர் கைக்குண்டு 10, மற்றும் பல இராணுவ உபகரணங்கள் விடுதலைபபுலிகளினால் கைப்பற்றப்பட்டன.

# வதிவிட பயிர்ச் செய்கையில் பயிர்ப் பாதுகாப்பும் உரப் பசளைப் பிரயோகமும்

இன்றைய சூழ்நிலையில் எங்களை மட்டுமல்ல பயிர்களையும் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். பயிர்களை போட்டிபோட்டுக் கொண்டு பூச்சிகள், நோய்கள். களைகள் போன்ற தீங்கிழைப்பாளர்கள் சேதம்விளைவித்து பயிர்களை அழித்து விளைவைக் குறைக்கின்றன. இப்பீடைகளின் தாக்கம்பற்றி அநேக வதிவிடப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளோர் அக்கறை கொள்ளாமல் இருந்து விட்டு இறுதியில் பயிர்கள் நன்கு தாக்கப்பட்டபின் இழப்புகளை சந்திக்கிறார்கள். பயிர்ப்பாதுகாப்பைப் பொறுத்தவரையில் வருமுன்காப்பதே சாலச்சிறந்ததாகும் பீடைகளைக் கட்டுப்படுத்தச் பூச்சிநாசினி இல்லாமல் கட்டுப்படுத்த முடியாது எனக்கருதி பயிர்ச்செய்கையை கைவிடுபவர்களும் உண்டு.

உலக நாடுகள் அனைத்துமே பூச்சிநாசினி பாவனையைக் குறைப்பதில் அக்கறை காட்டுகின்றன. இன்றைய பொருளாதாரதடைகளால் எமக்குப் பொருத்தமான சிபார்சு செய்யப்பட்ட பீடைநாசினிகள் கிடைப்பதில்லை பூச்சிநாசினிகளை பயிர்களுக்குப் பாவிக்கும் போது பின்வரும் தீமைகள் ஏற்படுகின்றன.

பூச்சிநாசினிகள் குறிப்பிட்ட காலத்துக்கு பயிர்களில் தங்கியிருக்கும் இக்காலத்தில் நாம் பயிரில் இருந்து உணவைப் பெற்று உண்ணும்போது பூச்சிநாசினியின் கூறுகள் எமது உடலை அடைந்து பக்கவிளைவை உண்டாக்குகிறது

தீமை செய்யும் பூச்சிகளை உண்டு அழிக்கும் பொறிப் பூச்சி, குளவி. தும்பி, ''லேடி பேட்'' வண்டு போன்றநன்மை செய்யும் பூச்சிகள் பூச்சிநாசினி பாவிக்கும் போது அழிக்கப்படுகின்றன. இதனால் இயற்கை சமநிலை குறைந்து தீமை செய்யும் பூச்சிகள் மேலும் அதிகரிக்கின்றன.

எமது சுற்றாடலிலுள்ள காற்று, மண், நீர் என்பவற்றுடன் பூச்சிநாசினிகள் கலந்து சூழல் மாசு அடைகிறது.

பூச்சிநாசினிகள் நச்சுத்தன்மையுள்ளவை தகுந்த முறையில் கையாளாவிடில் அபாயத்தை ஏற்படுத்தும்.சில சமயங்களில்மரணமும் ஏற்படலாம்.

எனவே வதிவிடவேளாண்மையில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் போது எவ்வளவு தூரம் பூச்சிநாசினியின் பாவனையைக் குறைக்க முடியுமோ அவ்வளவு தூரம் குறைத்து மற்றைய பீடைக் கட்டுப்பாட்டு முறைகளான பயிர்ப்பராமரிப்பு முறை பயிர் செய்கை முறை,பொறிமுறை, உயிரியல் முறை என்பவற்றை ஒருங்கிணைத்து ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் வதிவிட பயிர்ச்செய்கை சிறிதளவில் மேற்கொள்ளுவதால் இலகுவாக ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாடுகளை மேற் கொள்ளலாம்.

### பயிர் மீதிகளை அகற்றல்

பயிர் செய்து முடிந்தவுடன் மீதிகளை எரித்தோ, புதைத்தோ அழித்து விடுவதனால் வண்டுகள், ஈக்கள் போன்றவற்றின் பெருக்கம் தடைப்பட்டு கட்டுப்படுத்தப் படுகிறது. வாழையில் நீள் மூஞ்சி வண்டையும், தென்னையில் கரு வண்டையும் இவ்வாறு கட்டுப்படுத்தலாம்.

### தாக்கப்பட்ட பகுதியை அகற்றல்

பயிரோ அல்லது பயிரின் ஒரு பகுதியோ தாக்கத்திற்கு உட்படும் போது அவற்றை அகற்றி எரித்து விடுவதனால் தாக்கப்பட்ட பகுதியினுள் இருக்கும் புழுக்கள் அழிக்கப்படுகின்றன. கத்தரி, தக்காளி. பாகல், புடோல் ஆகியவற்றில் பழம் அழுகிய நிலையில் இருக்கும்போது அவற்றை அகற்ற வேண்டும். வெங்காய தாள் கோதிக்கு நுனிப் பகுதியை அகற்றல் கத்தரி தண்டு துளைப்பானுக்கு வாடிய பகுதியை அகற்றுதல் மூலம் கட்டுப்படுத்தலாம்.

### களைகள் அகற்றுதல்

அநேக பூச்சிகள் நோய்களுக்கு உறைவிடமாகவும் பெருக்கத்துக்கு ஏதுவாகவும் களைகள் காணப்படுகின்றன. நீர்ப்பாசன வாய்க்கால்கள், வேலி ஓரங்கள், பாதைகள், வரம்புகள், பயிரிடப்படாத இடங்களைத் துப் புரவாக வைத்திருக்க வேண்டும் பயிர்களுடன் களைகள் போட்டி போட்டு வளர்வதால் பயிர்களிடையேயும் களைகள் இல்லாது வைத்திருப்பதனால் அநேக பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

### பயிர்ச் செய்கை முறைகள்

தொடர்ந்து ஒரே இடத்தில் ஒரே வகையான பயிர்களை பயிரிடுவதால் போஞ்சி ஈ, பழ ஈ போன்ற பூச்சிகளும் பற்றீரியா வாடல்போன்ற நோய்களும் ஏற்படும். இதனால் போகத்துக்குப் போகம் பயிர்களை மாறி மாறிப் பயிரிட வேண்டும்.

பயிர்களைக் கலந்தும் பயிரிட வேண்டும். அதிலும் வெறுப்பூட்டும் பயிர்களை நடுவது சிறந்தது. உதாரணமாக - கோவா பயிர்களுக்கிடையில் தக்காளியைப் பயிரிடும்போது கோவாவில் சேதம் விளைவிக்கும் ''டயமன் முதுகு அந்து'' விரட்டப்படுகிறது.

அருகருகே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பயிர்களைப் பயிரிடும் போது ஒன்றில் ஏற்படும் தாக்கம் மற்றையதில் ஏற்படுவதால் கவனித்துப் பயிரிட வேண்டும், பயிர்களுக்கு சிபார்சு செய்யப்பட்ட இடைவெளி விட வேண்டும். காலத்திற்கு ஏற்ற பயிர்களையும் நோய் எதிர்க்கக்கூடிய பயிர்களையும் பயிரிட வேண்டும். வற்றாளை போன்ற பயிர்களில் நீள் மூஞ்சி வண்டின் தாக்கம் காணப்பட்டால் அறுவடையை காலத்திற்கு முந்திக் கொள்ள வேண்டும்.

### கையால் பொறுக்குதல்

புழுக்கள் (குடம்பிகள்) முட்டைகள், கூட்டுப்புழுக்கள், மெதுவாக நகரும்பூச்சி வண்டுகளை கையால் பொறுக்கி அழிப்பது மிகவும் மலிவான முறையாகும். வீட்டுத் தோட்டத்திற்கு இதுவே பிரயோசனமான சுலபமான முறையாகும். சிறிதளவு மண்ணெண்ணையை நீரிலிட்டுக் கலந்து அதனுள் பீடைகளை போடலாம். அல்லது உப்பு நீரில் இவற்றைப் போட்டு அழிக்கலாம்.

### ஒளிப்பொறி

இரவு நேரங்களில் தோட்ட ஓரத்தில் நெருப்பு எரிப்புகள் மூலம் பூச்சிகள் வெளிச்சத்தினால் கவரப்பட்டு நெருப்பில் வீழ்ந்து இறக்கும். முற்காலத்தில் சொக்கப்பானை எரித்தல், விளக்கீடு போன்ற நிகழ்ச்சிகள் மூலமும் பூச்சிகள் கட்டுப்பாட்டில் வந்துள்ளன.வசதிப்படுமாயின்பிரகாசமான விளக்கு ஒன்றைத் தூக்கி அதன் கீழ் நீருள்ள பாத்திரம் ஒன்றை வைப்பதன் மூலம் பூச்சிகளை இறக்கச் செய்யலாம்.

### நிறப்பொறி

பயிர்களிடையே பாத்திரத்தில் மஞ்சள் நீரை வைப்பதன் மூலம் அழுக்கணவன், காய்துளை புழுக்கள், மஞ்சள் நிறத்திற்கு கவரப்பட்டு நீரில் விழுந்து இறக்கின்றன. பயிர்களிடையே அல்லது எல்லைகளில் மஞ்சள் நிறப் பூ பூக்கும் சணல், சூரியகாந்தி நிலக்கடலை போன்றவற்றை நாட்டி அவற்றில் அழுக்கணவனும் காய் துளைப்புழுக்களும் வரும்போது பூச்சிநாசினி தெளித்து கட்டுப்படுத்தலாம்.

### உணவுப் பொறி

பழ ஈயைக் கட்டுப்படுத்த துண்டுகளாக வெட்டிய பழங்களைப் பூச்சி நாசினியில் நனைத்து (தோய்த்து) தோட்டத்தில் வைக்கலாம், எலுமிச்சைக்கு பால் எடுத்த தேங்காய் துருவலை விசிறினால் கவரப்பட்டு வரும் எறும்புகள் இலைச்சுரங்கம் அறுப்பியின் முட்டைகளை உண்டு அவற்றின் பெருக்கத்தைக் குறைக்கும்

### உறை பாவித்தல்

புடோலில் பழ ஈ தாக்காமல் இருக்க பொலித்தின் உறையாகப் பாவிக்கப்படுகிறது. தடித்த கடதாசி, துணி, பிளாஸ்ரிக் பொருள்கள், சிரட்டை போன்றவற்றை உறைகளாகப் பாவித்து பழங்களைத் தாக்கும் பீடைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

### ஒட்டுப்பொருள்களைப் பாவித்தல்

பெப்பலீன் எண்ணையை கடதாசியில் பூசி பயிர்களிடையே வைக்கும் போது எண்ணையில் பூச்சிகள் பறக்க முடியாமல் இறக்கின்றன. பினாட்டினால் அழுக்கணவனைஒற்றி எடுக்கலாம். இதே போல் பனங்கழியை கத்தரிக்கு விசிறி தண்டு துளைப்பானின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

### புகையிடல்

வேப்பம் பிண்ணாக்கு, சுஞ்சாங்கோரை, எருக்கலை, நொச்சி, மருத்துவக் கந்தகம் என்பவற்றினால் புகையிடும் போது பூச்சிகள் விரட்டப்படுகின்றன.

### வீடுகளில் தயாரிக்கக் கூடிய கிருமிநாசினிகள்

ஒரு கிலோ வேப்பமிலையை 5 லீற்றர் நீரில் கலந்து மூடிய பாத்திரத்தில் நீர் தங்க மஞ்சள் நிறமாக வரும்வரை அழிக்க வேண்டும். பின் ஓர் இரவு ஆறவிட்டு, மறு நாள் பாவிக்கலாம்.

ஒரு கிலோ பச்சை வேப்பம் இலைகளை உரலில் இடித்து, 5 லீற்றர் நீரில் ஒரு நாள் ஊறவிட்டு மறுநாள் பாவிக்கலாம்.

50 கிராம் வேப்பம் விதைகளை மாவாக்கி ஒரு லீற்றர் நீரில் கலந்து, ஓர் இரவு ஊறவிட்டுப் பாவிக்கலாம்.

100 கிராம் மிளகாய்ப் பொடியை ஒரு லீற்றர் நீரில் கலந்து ஒருநாள் ஊறவிட்டு 15 ம் கலவையுடன் அதேயளவு சவர்க்காரக் கரைசலை சேர்த்துப் பாவிக்கலாம்:

100 கிராம் உள்ளியை ½ லீற்றர் சுடு நீரில் ஒருநாள் ஊறவிட்டு, வரும் கலவையை 4 லீற்றர் நீரில் கலந்து அதிகாலையில் விசிற வேண்டும்.

உள்ளியை மாவாக்கி சாம்பலுடன் கலந்து விசிறலாம்.

புகையிலைக் காம்புகளை ஓர் இரவு நீரில் ஊறவைத்து, பின் கொதிக்கவைத்து ஆறிய குளிர்ந்த கலவையை பாவிக்கலாம்.

30 கிராம் சவர்க்காரத்தை 4½ லீற்றர் நீரில் கலந்து சூடாக்கி, 2 தேக்கரண்டி மண்எண்ணை கலந்து பாவிக்கலாம்.

புகையிலைச்சாறு, வெங்காயச்சாறு, தக்காளி இலைச்சாறு, காரமான மிளகாய் என்பவற்றை அரைத்துப் பெறும் கலவையுடன் அதேயளவு நீர் கலந்து பாவிக்கலாம்;

மேற் கூறப்பட்ட கலவைகளை சீலையினால் வடித்து எடுக்க வேண்டும். தெளிகருவிகள் வேண்டியதில்லை. பூவாளியினால் விசிறலாம், அல்லது செடிகளை விளக்குமாறு போன்று கட்டி அதனால் தெளிக்கலாம்.

(தொடரும்)

## மெய்வல்லுநர் போட்டிகள்

(குருநகர்)

கொழும்புத்துறை புனித யோசப் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

(21)


## வரி விளம்பரம்

### குழந்தைகள் வைத்தியம்

தீவக பாக்கியம் குழந்தைகள் சிகிச்சை நிலையம் K.K.S வீதி, மனோகரா சந்திக்கு அருகாமையிலும் கல்வியங்காட்டிலிருந்து 1 மைல் தொலைவிலுள்ள இருபாலைச் சந்தியிலும் இயங்குகின்றது.


(2284


## மென்பந்து கிரிக்கெட் போட்டி

அளவெட்டி யுத் விளையாட்டுக் கழகத்தின் பத்தாம் ஆண்டு நிறைவை ஒட்டி 11 பேர் கொண்ட 20 ஓவர் மென்பந்து கிறிக்கெட்போட்டி ஒன்று நடைபெற உள்ளது. பங்குபெற விரும்பும் கழகங்கள் 25- 03- 92 இற்கு முன் தமது விண்ணப்பங்களை செயலாளர் யுத் விளையாட்டுக் கழகம், அளவெட்டி வடக்கு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(சி/ 4060)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
| --- | --- | --- |
| 01 |  | 17 |
| — | | — |
| 02 | | 03 |
| — | | — |
| 1967 | | 1987 |

### லெப். கேதீஸ்

### தி. விஜயானந்தன் (ஜீவா)

எம் தமிழீழ மண்ணின்
விடிவுக்காக
களத்திலே
களப்பலியான
மாவீரன் ''கேதீசை''
மறக்குமோ எம் நெஞ்சம்

பெற்றோர், உடன் பிறப்பாளர்
உறவினர்.

211/2 பெரிய தெரு,
யாழ்ப்பாணம்.

## கடற்றொழிலாளரின்

# கடற்றொழிலாளரின் மாபெரும் எழுச்சி ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளருக்கு இதுவரை உதவி நிவாரணம் வழங்காத காரணத்தை கண்டித்து மாபெரும் எழுச்சி ஊர்வலம் நடைபெறவுள்ளது.

இவ்வூர்வலத்தினை ஆனைக்கோட்டை புனித சூசையப்பர் கடற்றொழிற் சங்கம், சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூ. சங்கம், நவாலி கடற்றொழிலாளர் கூ. சங்கம் கிராமிய கடற்றொழிலாளர் அபிவிருத்திச்சங்கம், உயரப்புலம் கடற்றொழிலாளர் கிராமிய அபிவிருத்திச் சங்கம் ஆகியன இணைந்து நடாத்துகின்றன.

எதிர்வரும் வியாழக்கிழமை (19.03.92) காலை 8.00 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகி சண்டிலிப்பாய் உதவி அரசாங்க பணிமனையில் பாதிக்கப்பட்டவர்கள் தமது மகஜரை கையளிக்க உள்ளனர்

## பொலனறுவை பொலிசிற்கு மட்டக்களப்பு பெயர்ப்பலகை

(மட்டக்களப்பு)

பொலனறுவை நகரத்திலுள்ள பொலிஸ் நிலையத்தின் முன்பாக மட்டக்களப்பு என மும்மொழிகளிலும் குறிக்கப்பட்டுள்ள பெயர்ப்பலகை வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொலனறுவைக்கு மட்டக்களப்பு எனப் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா அல்லது மட்டக்களப்பு மாவட்ட எல்லை விடுவிக்கப்பட்டுள்ளதா என 'ஐலன்ட்' நாளிதழ் கேள்வி எழுப்பியுள்ளது.

மேலும் இப்பெயர்ப்பலகையில் மட்டக்களப்பு என்பது தமிழில் ''மட்டககளப்பு'' என்று எழுதப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது,

## பெருந் தோட்டங்களில் நகரசபைகள் போல அதிகாரசபை நிறுவப்படும்

(கொழும்பு)

தனியார் துறையினர் நிர்வாகத்தைப் பொறுப்பேற்கும் பெருந் தோட்டங்களிலுள்ள சமூக,சமய கலாசார தேவைகளை நிறைவேற்றுவதற்கென தோட்டங்களில் அரசாங்கத்தால் அதிகார சபைகள் நிறுவப்படும் என்று அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில். இந்த அதிகார சபைகள் நகர சபைகள் போல செயற்படும் எனவும்,தோட்டத் தொழிலாளர் வசிக்கும் காணிகள் வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்கல் வீடுகளை வேண்டியபடி திருத்துதல்,நீர்,சுகாதாரம் மற்றும் சமூகத் தேவைகளை நிறைவேற்றல் சமய மற்றும் சனசமூக நிலையங்கள் மின்சாரவசதி போன்ற வேலைகள் இந்த அதிகார சபையினால் நிறைவேற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

## பெற்றுக் கொள்ளவும்


கோப்பாய்வடக்கை சேர்ந்த இரத்தின சிங்கம் (56241-1666V) என்பவரது அடையாள அட்டையும் வேலைஸ்தல அடையாளஅட்டையும் (காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலை) யாழ் வளாகத்தினுள் அகிலன் என்பவரால் கட்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்திலிருந்து மேலும் ஒருதொகுதி மக்கள் தலைமன்னார் வந்தனர்

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து மேலும் ஒரு தொகுதி அகதிகள் கடந்த வெள்ளியன்று இராமனுஜம் கப்பல் மூலம் தலைமன்னார் வந்து சேர்ந்தனர்.

நூற்றுப்பதினைந்து குடும்பங்களைச்சேர்ந்த ஐந்நூற்றிப் பதினைந்து பேர்கள அடங்கிய இத் தொகுதியில் அநேகமானோர் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தோராவர்.




## தமிழீழ தாயகப் படம் திரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழச் சிறார்கள் தமது பாரம்பரிய பிரதேசத்தை அறிந்து கொண்டு உண்மையின் கருவூலத்தை பட்டறிவு மூலம் அறிந்து கொள்ளும் பொருட்டு எதிர்வரும் வியாழக்கிழமை (19-3-92) பாடசாலைகளில் வரையப் பட்டுள்ள தமிழீழ தாயகப்படம் திரை நீக்கம் செய்யப்படவுள்ளது.

இத்திரை நீக்க வைபவத்தில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் கருத்துரைகளை நிகழ்த்த உள்ளனர்.

தாயகப்பிரதேச விளக்கமடங்கிய கைநூல்விளக்கவுரையும் இடம் பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் நடைபெறும் இவ்வைபவமானது ஏனைய தமிழ் மாவட்டங்களிலும் விரைவில் நிறைவு செய்யப்படவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## அடையாள அட்டை விநியோகம்

க. பொ. த (உயர் தரம்) பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கென விரைவில் தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளது. இதற்கான சுற்று நிருபங்கள் எல்லாப் பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தத்தம் பிரதேச கிராம சேவையாளர்களுக்கு ஊடாக விண்ணப்பிக்கலாம் எனவும் ஆட்பதிவுத் திணைக்களம்தெரிவித்துள்ளது

## நினைவு கூருகின்றோம்
## 1992-03-17

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு, அட்டப்பள்ளம் பகுதியில் தேசவிரோதிகள் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**லெப். லவன்** (செல்லப்பா பாக்கியநாதன் - அட்டப்பள்ளம் நிந்தாவூர், மட்டக்களப்பு)

நாவற்குழியில் சிறிலங்காப் படையினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய -

**லெப். ஜீவா / கேதீஸ்** (திருச்செல்வம் விஜயானந்தன் - 211 / 02, பிரதானவீதி, குருநகர், யாழ்ப்பாணம்)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய -

★ **சொர்ணம்** (மூத்தான் சிவசரணம் - முப்பதேக்கர், மூதூர், திருக்கோணமலை)

1988ஆம் ஆண்டு செட்டிபாளையத்தில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்ட -

**ரமணன்** (கணபதிப்பிள்ளை இலட்சுமணன் - பொத்துவில் - 03, அம்பாறை)

மணற்பிட்டியில் தேசவிரோதசக்திகளினால் கைது செய்யப்பட்டு இந்தியப் படையினரால் அடித்துக் கொலை செய்யப்பட்ட -

**றிஸ்வான்** (மாமாங்கம் தட்சணாமூர்த்தி - திருப்பழுகாமம், மட்டக்களப்பு)

1989ஆம் ஆண்டு இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **பரமேஸ்** (குணரத்தினம் பரமேஸ்வரன் - தம்பலகமம், திருக்கோணமலை)

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(சி/4059)

# இந்துப் பெருங்கடலின் கண்காணிப்புக்கு அரக்கோணத்தில் ராஜாளியின் மையம்

### சிந்தனைக்கு

செயலுக்கு உகந்ததாக அமையாத பேச்சு. அடியோடு அடக்கப்படுவதே நல்லது.

- தாமஸ் சார்லைல்


## ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 17-03-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 085-2839 நிர்வாகபீடம் 2308

த. பெ. எண் 03


## இழுத்தடிப்பு தந்திரம் ஆபத்தில் முடியும்

"தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியை சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் காலவரையறையின்றி இழுத்தடித்தால் நாடு பிரிந்து தமிழீழ அரசு உருவாவதைத் தவிர்க்க முடியாது" இவ்வாறு விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் தங்களை நேற்று முன் தினம் சந்தித்த நல்லெண்ணத் தூதுக் குழுவிடம் எடுத்துரைத்துள்ளனர்.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒருசமாதான தீர்வைக் காண்பதில் சிறிலங்கா அரசாங்கம் தீவிர அக்கறை காட்டுவதாக இல்லை பேச்சளவில் அரசியல் தீர்வு பற்றிக் குறிப்பிடினும், இராணுவத் தீர்வு ஒன்றை நாடி நிற்பதையும், அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவுமே தெரிகின்றது.

தமிழர் தேசிய போராட்டம் ஆயுதப் போராட்டமாக தீவிரமடைந்த பின்னர் இனப்பிரச்சினைத் தீர்விற்கென அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட எந்த நடவடிக்கையும் காலத்தை இழுத்தடிக்க மேற்கொள்ளப்பட்டதாகவே உள்ளது. 1983ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு சில மாதங்களின் பின் தோல்வி கண்டது. இதே போன்று ஜே. ஆர். - கூட்டணியினர்-கொழும்பில் நடத்திய பேச்சுவார்த்தையும்' பின்னர் நடந்த திம்பு பேச்சுவார்த்தையும், பெங்களூர் பேச்சுவார்த்தையும் இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கையும், பின்னர் 1989இல் ஆரம்பமாகிய சர்வகட்சி மாநாடும் தோல்வியிலேயே முடிவுற்றன. ஆனால், இவை காலத்தைக் கடத்துவதற்கும் இராணுவத் தயாரிப்பில் ஈடுபடவுமே சிறிலங்கா அரசாங்கம் பயன்படுத்தியது என்பதை திட்டவட்டமாக தெளிவுபடக் கூறலாம். இதனை இப்பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்கம் உருப்படியான திட்டம் எதையும் முன்வைக்கவில்லை என்பதில் இருந்தே புரிந்து கொள்ளலாம்.

ஆனால், இப்பேச்சுவார்த்தைகளைத் தனக்கு அரசியல், பொருளாதார நெருக்கடிகள் வரும்போது தனது தேவை கருதியே சிறிலங்கா அரசாங்கம் நடத்தியது. 1983இல் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து முதலாவது சர்வகட்சிமாநாடு கூட்டப்பட்டது. இனக்கலவரத்தால் மாசுபட்டிருந்த சிறிலங்காவின் பெயரைப் பாதுகாக்க இம்மாநாடு கூட்டப்பட்டது. இறுதியில் அரசியல் கட்சிகளுக்கு இடையில் [illegible]

இந்து மா சமுத்திரப் பகுதியில் இந்தியாவின் மேலாண்மையை நிலை நாட்டுவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு இந்திய கடற்படையை விரிவுபடுத்துவதும் பலப்படுத்துவதுமான நடவடிக்கைகளில் இந்தியா ஈடுபட்டுள்ளது இரகசியமான விடயமல்ல. ராஜிவ் காந்தி பிரதமராகப் பதவியேற்ற காலத்திலேயே இதற்கான அடிக்கட்டுமானங்களும், திட்டங்களும் வரையப்பட்டு படிப்படியாக நிறைவேற்றப்பட்டும் வருகின்றன விமானந்தாங்கி கப்பல்கள் முதல் நீர் மூழ்கிக் கப்பல்கள் வரை இந்தியா கொள்வனவு செய்துள்ளது மட்டுமன்றி அணு ஆயுதங்களையும் இந்தியா தன்னகத்தே கொண்டிருக்க வேண்டுமென அண்மைக் காலத்தில் குரல்கள் எழுப்பப்பட்டுள்ளன:

இந்தப் பின்னணியிலேயே ஐ எம்.எஸ் ராஜாளி திறந்து வைக்கப்பட்டுள்ளமை சிறப்புக் கவனத்தைப் பெறுவதாக உள்ளது இந்தியக் கடற்படையினர் கிழக்குக் கரையோர கண் காணிப்பிற்கெனக் கூறி இந்திய மெராயன் சேவையின் ராஜாளி (ஐ எம் எஸ் ராஜாளி) என்னும் இவ் விமானத் தளத்தை அமைத்துள்ளனர். சென்னையிலிருந்து நூறு கிலோ மீற்றர் தொலைவில் அரக்கோணம் பகுதியில் இது அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த பதினோராம் திகதியன்று இந்திய குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் இவ் விமானத்தளத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்ததுடன் இதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் உட்பட பாதுகாப்புத்துறைசிரேஷ்டஅதிகாரிகள் மற்றும் கடற்படையின் உயர் அதிகாரிகள் பலரும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்

இதன் பின்னர் புதுடில்லியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் அயல்நாட்டு மண்ணில் ஒரு அங்குலம் கூட இந்தியாவிற்குத் தேவையில்லை. ஆசியாவிலோ, தெற்காசியாவிலோ, தலைமைப்பீடத்தை அடையவும் இந்தியா விரும்பவில்லை என்று குறிப்பிட்டார். எனினும் தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியா வல்லரசாகவும், இராணுவ ரீதியில் முன்னணி நாடாக மாறி வருவதாகவும் அண்மையில் வாஷிங்டனில் வெளியான இரகசிய அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது அத்துடன் இந்தியாவும், பாகிஸ்தானும் அணு ஆயுதங்களைத் தமவசம் வைத்திருக்கும் ஆர்வம் கொண்டுள்ளன என்பதும் அந்த இரகசிய அறிக்கையில் கோடி காட்டப்பட்டுள்ளது.

இந்த கூற்றுகளுக்கு உறுதி செய்வதுபோலவே தற்போது செயற்பட ஆரம்பித்திருக்கும் ஐ.எம் எஸ்ராஜாளியும் அமைகிறது எனலாம்.

**இனியவன்**

ஐ. எம். எஸ் ராஜாளிக்கான அத்திவாரமிடும் வேலைகள் ராஜிவ்காந்தி பிரதமராக இருந்த காலத்திலேயே ஆரம்பித்துவிட்டன. ஐ. எம். எஸ் ராஜாளி விமானத்தளத்திற்கான அடிகல்லை 1988 நவம்பர் 12 ல் ராஜீவ் காந்தி தாமே நாட்டி வைத்தார்.

இந்தியக் கடற்படையில் உளவு நடவடிக்கைகளுக்கு உதவக்கூடிய வகையில் - இந்து மா கடற் பகுதியில் இந்தியாவின் மேலாண்மையைப் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இவ் விமானத்தளம் அமைக்க திட்டம் தீட்டப்பட்டது. தென்னாசியப் பிராந்தியத்திலேயே மிகப்பெரிய விமானத்தளம் ஐ எம். எஸ் ராஜாளியேயாகும். மூன்றரை ஆண்டுகளில் இத் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு கடந்த பதினொராம் திகதியன்று வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விமானத் தளத்தில் நாற்பது கிலோ மீற்றருக்கு அதிகமான நீளமுடைய ஓடு பாதையும் விமானங்கள் தங்க வைத்துப் பாராமரிக்கக் கூடிய வசதியும் அமைக்கப்பட்டுள்ளது இங்குதரிக்கவைக்கப்படக் கூடிய 8 கியூ 142ரக விமானங்கள் செயற்திறன் மிக்கவை என்று சொல்லப்படுகின்றது.

இந்த விமானங்கள் அரக்கோணத்திலிருந்து சென்னைக்கு ஆறு நிமிட நேரத்தில் வந்து விடக்கூடியவை என்றும் தொடர்ந்து பதினாறு மணி நேரம் வரை வானில் வலம் வரக் கூடியவை என்றும் கூறப்படுகின்றது அத்துடன் ஆழ் கடலில் பயணிக்கும் நீர் மூழ்கிகள் உட்பட அனைத்து ஊடுருவல்களையும், கண்டறியவும் தாக்கி அழிக்கவும் இந்த ரக விமானங்கள் பயன் படுத்தப்படக்கூடியனவாகும் அதாவது தமிழ் நாட்டின் அரக்கோணத்திலிருந்து புறப்பட்டால் அவுஸ்ரேலியாவின் முனைவரை எங்கும் தரிக்காமலே சென்று திரும்பக் கூடிய அதி கூடிய சக்தி வாய்ந்த வேவு விமானங்கள் இந்த சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இந்த விமானத்தளம் அமைப்பதற்காக மட்டும் நூறு கோடி ரூபா வரை செலவிடப்பட்டுள்ளது

இவற்றினைவிட இந்தியா அண்மையில் பெற்றிருக்கும் விமானந்தாங்கிக் கப்பல்கள், மற்றும் நீர் மூழ்கிகள் என்பவற்றை சேர்ந்தால் இந்தியா தனது கடற்படை பலத்தை பெருக்குவதிலும் விரிவாக்குவதிலும் தீவிரம் காட்டி வருவதைபுரிந்து கொள்ளலாம்

இந்தியத் துணைக் கண்டத்தின் நிலப்பரப்பு ஒரு தீபகற்பமாக மூப்புறமும் கடலால் சூழப்பட்டதாக இருக்கும் நிலையில் இந்திய கடற்படைப் பலத்தை அதிகரிப்பது அதிசயப்படத்தக்க தொன்றல்ல எனினும் கிழக்குக் கடற் பரப்பில் இந்தியா கொண்டுள்ள அக்கறையும், கண்காணிப்பும் ஈழப்போராட்டத்தைப் பொறுத்த இந்திய நிலைப்பாட்டுடன் தொடர்புடையது என்று ஊகிப்பது பெருபபாலும் தவறாகாது

## ஜனநாயக சீர்திருத்தங்களுக்கு வெள்ளையர் ஆதரவைக் கோரி தென் ஆபிரிக்காவில் கருத்துகணிப்பு

(ஜோஹனஸ்போக்)

தென் ஆபிரிக்காவில் இன்று வெள்ளையர் மட்டும் பங்குபற்றக் கூடிய கருத்துக்கணிப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

தென் ஆபிரிக்க அரசியலில் ஜனநாயக மாற்றங்களை மேற்கொள்வதற்காக வெள்ளையரின் அனுமதியை பெறுவதற்காக தென்ஆபிரிக்க ஜனாதிபதி டி. கிளஸ்க் இக் கருத்துக்கணிப்பினை நடத்த உத்தரவிட்டுள்ளார்.

இன்று நடைபெறவுள்ள வெகுஜன வாக்கெடுபிற்கு ஆம் என வாக்களிக்கவேண்டாமென்னும் பிரசாரத்தில் கன்சர்வேட்டிவ் கட்சியும் தீவிரவாத ஆபிரிக்காளர் எதிர்ப்பு இயக்கமும் ஈடுபட்டுள்ளன.

இதே நேரம் தென் ஆபிரிக் [illegible] ஜனநாயகத்திற்கு ஆம் என வாக்களிக்குமாறும்,

ஜனநாயகத்திற்காக வாக்களிக்கப்பட்டால் அதன் மூலம் வெள்ளையர் கறுப்பு இன மக்களின் பிரதிநிதிகள் ஒரு மேசையில் கூடி அரசியலமைப்புத் திட்டமொன்றை உருவாக்கலாமெனவும் ஆபிரிக்க மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்

ஆனால் ஜோஹனஸ் பேர்க் பகுதியில் இன்பக்ட்டாஅமைப்பின் பேரணி அமைதியாக நடந்து முடிந்துள்ள போதிலும் கூட கறுப்பு இனத்தவர்களின் குடியிருப்புப் பகுதிகளில் மோதல்கள் நடந்து வருவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன இந்த மோதல்களில் இருநூற்றி ஐம்பது கறுப்பின மக்கள் உயிர் இழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பெற்றியாட் தொழில் நுட்பம் சீனாவிற்கு கிடைத்ததா? அமெரிக்கா ஆராய்ச்சி

பெற்றியாட் விமான எதிர் [illegible] கொடுத்திருக்கலாம் என்ற [illegible]

## யாழ். இந்து - ஸ்கந்தவரோதயா கிரிக்கெட் போட்டி 'டிரா' வில் முடிவடைந்தது

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த கிரிகெட் போட்டி யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கும் சுன்னாகம ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை 14-ம் திகதி இடம் பெற்றது.

இட்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றது. இதில செல்வன் ஈ. மதியழகன் 52 ஓட்டங்களையும் செலவன் க சிவன்சே 86ஓட்டங்களையும்பெற்றனர்.

யாழ் இந்துக்கல்லூரி சார்பில் பந்து வீசிய செல்வன் வி விஜயகுலன் 4 விக்கெட்டுகளை 30 ஓட்டங்களை கொடுத்து கைப்பற்றினார்.

தொடர்ந்து யாழ் இந்துக் கலலூரி துடுப்பெடுத்தாடிய போது 5 விக்கெட் நஷ்டத்திற்கு 312 ஓட்டங்களைப் பெற்றது இதில் அணித் தலைவர் செல்வன் நரேந்திரன் மிகவும் சிறப்பாக விளையாடி 63 ஓட்டங்களைப் பெற்றார். செல்வன் என் சசிகரன் ஆட்டமிழக்காமல் 72 ஓட்டங்களையும், செல்வன் வி விஜயகுலன் ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களையும் பெற்றனர்

செல்வன் இராஜேந்திரன் மிகவும் திறம்பட பநது வீசி 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

இப்போட்டிக்கு திரு. இ. சிறீதரனும், பா, கிருபாகானும் மத்தியஸ்தம் வகித்தனர்.

(42)

## நீர்த் தேக்கங்களிலுள்ள நீர்

தீர்விற்கென அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட எந்த நடவடிக்கையும் காலத்தை இழுத்தடிக்க மேற்கொள்ளப்பட்டதாகவே உள்ளது. 1983ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு சில மாதங்களின் பின் தோல்வி கண்டது. இதே போன்று ஜே. ஆர். - கூட்டணியினர்-கொழும்பில் நடத்திய பேச்சுவார்த்தையும்' பின்னர் நடந்த திம்பு பேச்சுவார்த்தையும், பெங்களூர் பேச்சுவார்த்தையும் இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கையும், பின்னர் 1989இல் ஆரம்பமாகிய சர்வகட்சி மாநாடும் தோல்வியிலேயே முடிவுற்றன. ஆனால், இவை காலத்தைக் கடத்துவதற்கும் இராணுவத் தயாரிப்பில் ஈடுபடவுமே சிறிலங்கா அரசாங்கம் பயன்படுத்தியது என்பதை திட்டவட்டமாக தெளிவுபடக் கூறலாம். இதனை இப்பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்கம் உருப்படியான திட்டம் எதையும் முன்வைக்கவில்லை என்பதில் இருந்தே புரிந்து கொள்ளலாம்.

ஆனால், இப்பேச்சுவார்த்தைகளைத் தனக்கு அரசியல், பொருளாதார நெருக்கடிகள் வரும்போது தனது தேவை கருதியே சிறிலங்கா அரசாங்கம் நடத்தியது. 1983இல் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து முதலாவது சர்வகட்சிமாநாடு கூட்டப்பட்டது. இனக்கலவரத்தால் மாசுபட்டிருந்த சிறிலங்காவின் பெயரைப் பாதுகாக்க இம்மாநாடு கூட்டப்பட்டது. இறுதியில் அரசியல் கட்சிகளுக்கு இடையில் நடந்த மாநாட்டில் மதத்தலைவர்களையும் சேர்த்து மாநாட்டை சிறிலங்கா அரசாங்கம் குழப்பி அடித்தது.

அதைத் தொடர்ந்து கொழும்பில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூட்டணியினரின் சந்திப்பு, திம்பு, பெங்களூர் பேச்சுவார்த்தை, 1987 இலங்கை - இந்தியா சமாதான ஒப்பந்தம், என்பன யாவும் இந்தியாவின் அழுத்தத்தின் காரணமாக ஏற்பட்டவையாகும்.

இறுதியாக விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பதினான்கு மாதத்திற்கு மேலாக நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தியது. ஆனால் அரசாங்கம் இந்தியாவை இலங்கையில் இருந்து வெளியேற்றும் ஓர் இராஜதந்திரநடவடிக்கையாகஇதனைமேற்கொண்டதே ஒழிய தமிழர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் எந்தவித நடவடிக்கையையும் முன் எடுக்கவில்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வு எதையும் முன்வைக்காததோடு விடுதலைப்புலிகள் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக முன்வைத்த குறைந்தபட்ச கோரிக்கைகளையும் அரசாங்கம் நிறைவேற்றத் தயாராக இருக்கவில்லை.

இந்த நிலையில் 1990 மத்தியில் ஆரம்பித்த போர் தொடர்ந்தும் 20 மாதங்களுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. ஆனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு பேச்சுவார்த்தை என அரசாங்கம் வெளிப்படையாக அறிவித்துக் கொள்ளுகின்றதே ஒழிய அவை குறித்து எதுவித முயற்சிகளையும் மேற்கொள்வதாக இல்லை. தற்பொழுது இனப்பிரச்சினை குறித்து ஆராய்ந்துவரும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைமைத்துவம் திரு. மங்கள முனசிங்காவின் தலையில் வலிந்து சுமத்தப்பட்ட தொன்றாகும். வெளியில் இருந்து உருவாகிய அழுத்தமும்பொருளாதார அரசியல் நெருக்கடிகளுமே இதற்குக்காரணமாகும் ஆனால் இக்குழுவும் ஓர் உருப்படியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமா என்பது சந்தேகமே.

ஆனால் அரசாங்கம் இவ்வாறு தொடர்ந்து இனப்பிரச்சினையை இழுத்தடித்துச் செல்லுமேயானால் இலங்கை இருநாடுகளாகப் பிளவுபடுவது தவிர்க்க முடியாதது ஆகும். அதாவது விடுதலைபுலிகள் தற்பொழுது சிவில் நிர்வாகத்திற்கான அமைப்புக்களை உருவாக்கி வருகின்றனர். அவை படிப்படியாக விரிவாக்கப்பட்டு தனி அரசு ஒன்றின் அடித்தளமாகப் பரிணமித்துவருகின்றன. காலப்போக்கில் பலம்மிக்க அரச இயந்திரமாக இவை மாறுவது தவிர்க்கமுடியாததாகும்

இந்த நிலையில் சிறிலங்கா அரசாங்கத்தின் காலம் கடத்தும் இராஜதந்திரமானது முன்னரைப்போல் அல்லாது இனிமேல் அரசாங்கத்திற்கு எதிர் மறைவான விளைவையே பெற்றுத்தரும்

# தென் ஆபிரிக்காவில் கருத்துகணிப்பு

(ஜோஹனஸ்போக்)

தென் ஆபிரிக்காவில் இன்று வெள்ளையர் மட்டும் பங்குபற்றக் கூடிய கருத்துக்கணிப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

தென் ஆபிரிக்க அரசியலில் ஜனநாயக மாற்றங்களை மேற்கொள்வதற்காக வெள்ளையரின் அனுமதியை பெறுவதற்காக தென்ஆபிரிக்க ஜனாதிபதி டி. கிளஸ்க் இக் கருத்துக்கணிப்பினை நடத்த உத்தரவிட்டுள்ளார்.

இன்று நடைபெறவுள்ள வெகுஜன வாக்கெடுப்பிற்கு ஆம் என வாக்களிக்கவேண்டாமென்னும் பிரசாரத்தில் கன்சர்வேட்டிவ் கட்சியும் தீவிரவாத ஆபிரிக்காளர் எதிர்ப்பு இயக்கமும் ஈடுபட்டுள்ளன.

இதே நேரம் தென் ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் தலைவர் நெல்சன் மண்டேலா இனவாதத்தைக் கைவிட்டு ஜனநாயகத்திற்கு ஆம் என வாக்களிக்குமாறும்.

ஜனநாயகத்திற்காக வாக்களிக்கப்பட்டால் அதன் மூலம் வெள்ளையர் கறுப்பு இன மக்களின் பிரதிநிதிகள் ஒரு மேசையில் கூடி அரசியலமைப்புத் திட்டமொன்றை உருவாக்கலாமெனவும் ஆபிரிக்க மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்

ஆனால் ஜோஹனஸ் பேர்க் பகுதியில் இன்பக்ட்டாஅமைப்பின் பேரணி அமைதியாக நடந்து முடிந்துள்ள போதிலும் கூட கறுப்பு இனத்தவர்களின் குடியிருப்புப் பகுதிகளில் மோதல்கள் நடந்து வருவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன இந்த மோதல்களில் இருநூற்றி ஐம்பது கறுப்பின மக்கள் உயிர் இழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பெற்றியாட் தொழில் நுட்பம்

# சீனாவிற்கு கிடைத்ததா? அமெரிக்கா ஆராய்ச்சி

பெற்றியாட் விமான எதிர்ப்பு ஏவுகணை தொழில் நுட்பம் தொடர்பான இரகசியங்களை இஸ்ரேல் சீனாவிற்குக் கொடுத்திருக்கலாம் என்ற தகவல் பற்றி அமெரிக்கா ஆராய்ந்து வருகிறது.

இஸ்ரேல் இதை மறுத்துள்ள போதிலும் தகவல் உண்மையாக இருந்தால் அமெரிக்க - இஸ்ரேல் ஒப்பந்தங்களை அது மீறுவதாக அமையுமென புஷ் நிர்வாகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்தோடு இந்த இரகசியங்கள் வெளியாகியிருந்தால் சீனா அதன் பாலஸ்டிக் ஏவுகணைகளை அபிவிருத்தி செய்யுமென புஷ் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# குர்திஷ் போராளிகள் ஈராக் இராணுவம் மோதல்

(லண்டன்)

ஈராக்கின் வடபகுதியில் குர்திஷ் இனத்திற்கும் ஈராக்கிய இராணுவத்திற்கு மிடையில் சண்டை நடைபெற்று வருகின்றது என்று பி. பி. ஸி. தெரிவிக்கிறது.

ஈராக்கிய குர்திஷ் இன மக்கள் வாழும்ஒருநகர்மீது ஈராக்கிய இராணுவம் குண்டு வீசித் தாக்கியதில் ஆறு பேர் கொல்லப்பட்டனர் என்றும்,

குர்திஷ் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில்பெரும் தாக்குதல் ஒன்றைதொடுக்க ஈராக்கியப் படைகள் வருவதாக குர்திஷ் தலைவர்கள் எச்சரித்து வந்ததைத் தொடர்ந்தும் சண்டை வேகம்பெற்றுள்ளது என்றும் பி பி ஸி குறிப்பிட்டுள்ளது.

# யெல்சினை பதவிவிலக ரஷ்யாவில் ஆர்ப்பாட்டம்

(மாஸ்கோ)

விலைவாசி உயர்வைக் கண்டித்தும், அதிபர் யெல்சினைப்பதவி விலகக்கோரியும் பல ஆர்ப்பாட்டங்கள் ரஷ்யாவின் பல்வேறு நகரங்களிலும் இடம் பெற்றுள்ளன.

பீட்டர்ஸ்பேர்க், மற்றும் பல நகரங்களிலும் நடந்த இவ் ஆர்ப்பாட்டங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் லெனின் மற்றும் ஸ்டாலினின் உருவப் படங்களையும் தாங்கிச் சென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஆர்மேனியா - அசர்பைஜான் யுத்த நிறுத்த உடன்பாடு

(தெகிரான்)

ஆர்மேனியா மற்றும் அசர்பைஜான் பிரதிநிதிக் குழுக்களுக்கிடையே இரண்டு நாட் பேச்சுகளின் பின் நேற்று முன்தினம் சண்டை நிறுத்தம் ஏற்படுவது தொடர்பாக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இப் பிரதிநிதிக் குழுக்களுக்கிடையிலான பேச்சுக்கள் ஈரான் தலைநகர் தெகிரானில் நடைபெறுகின்றது இது தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு செய்தி வெளியிட்ட ஈரான் வெளிநாட்டு அமைச்சர் அலி அக்பர் வெலயாந்தி மேலும் கூறுகையில் பொருளாதார தடைகளை விலக்க இருதரப்பாரும் உடன்பட்டமை உட்படஇந்தச் சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஒரு சில நாட்களில் அமுலுக்கு வருமென நம்பிக்கை தெரிவித்தார்.

# தேசிய முன்னணியின் எதிர்காலம் வி.பி.சிங்குடன் ஆலோசனை

(சென்னை)

முன்னாள் பிரதமர் வி.பி. சிங்குடன் கலந்தாலோசனை செய்த பின்னர் தேசிய முன்னணியின் எதிர்காலம் குறித்து முடிவு செய்யப்படுமென்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

கோயம்புத்தூரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில் தேசிய முன்னணியில் அங்கத்துவம் வகிக்கும் 'தெலுங்கு தேசம்' கட்சியில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி துரதிட்டவசமானது எனக் குறிப்பிட்டார்.

## கொர்பச்சேவிற்கு பேராசிரியர் பதவி

(பாரிஸ்)

பிரான்சின் ஆராய்ச்சி போதனை நிறுவனமான 'கொலேஜ் பிரான்ஸ்' முன்னாள் சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவிற்குபேராசிரியர் பதவியினைவழங்க யோசனை தெரிவித்திருப்பதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த கிரிக்கெட் போட்டி யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கும் சுன்னாகம ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை 14-ம் திகதி இடம் பெற்றது.

இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றது. இதில செல்வன் ஈ. மதியழகன் 52 ஓட்டங்களையும் செல்வன் க சிவன்சே 86ஓட்டங்களையும்பெற்றனர்.

யாழ் இந்துக்கல்லூரி சார்பில் பந்து வீசிய செல்வன் வி விஜயகுலன் 4 விக்கெட்டுகளை 30 ஓட்டங்களை கொடுத்து கைப்பற்றினார்.

தொடர்ந்து யாழ் இந்துக் கல்லூரி துடுப்பெடுத்தாடிய போது 5 விக்கெட் நஷ்டத்திற்கு 312 ஓட்டங்களைப் பெற்றது இதில் அணித் தலைவர் செல்வன் நரேந்திரன் மிகவும் சிறப்பாக விளையாடி 63 ஓட்டங்களைப் பெற்றார். செல்வன் என் சசிகரன் ஆட்டமிழக்காமல் 72 ஓட்டங்களையும், செல்வன் வி விஜயகுலன் ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களையும் பெற்றனர்

செல்வன் இராஜேந்திரன் மிகவும் திறம்பட பந்து வீசி 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

இப்போட்டிக்கு திரு. இ. சிறீதரனும், பா, கிருபாகரனும் மத்தியஸ்தம் வகித்தனர்.

(42)

## நீர்த் தேக்கங்களிலுள்ள நீர்

# பதினொரு நாட்களுக்கு மட்டுமே போதுமானது

நீர் மின் உற்பத்தி செய்யும் பிரதான நீர்த்தேக்கங்களில் இன்னும் பதினொரு நாட்களுக்கு மட்டுமே தேவையான நீர் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

தற்போதைய நிலையில் இருக்கும் நீர் பதினொரு நாட்களுக்கு மட்டுமே போதுமானதெனவும், மின்சார சிக்கனத்தைக் கடைப்பிடிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# மொழி உரிமை மறுப்பு; தமிழ் மக்கள் பாதிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பு ரீதியான மொழியுரிமை உறுதி செய்யப்பட வேண்டுமென அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார்.

அவர் அரசுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் மேலும் தெரிவிக்கையில் அரசியலமைப்பு ரீதியாக உறுதிசெய்யப்பட்டுள்ள மொழி உரிமை சிலசந்தர்ப்பங்களில் மாற்றப்படுவதால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டு உள்ளார். குறிப்பாக தமிழ் மக்களின் வழக்கு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் இது எழுந்துள்ளது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

## நன்னீர் மீன்பிடி

தற்போதைய சூழ்நிலையில் கடற்தொழில் பாதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக நன்னீர் மீன்பிடியை நடைமுறைப் படுத்துவதற்கு முதற்கட்டமாக இரணமடுக் குளத்தில் நன்னீர் மீன்பிடிப்பை மேற்கொள்வதற்கான ஆரம்ப முயற்சிகளில் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

பிடிக்கப்படும் மீன்களை பதப்படுத்தி விற்பனை செய்வதற்கும் கோழித்தீன் தயாரிப்பில் பயன்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மீனிற்கான சந்தை வாய்ப்புகளை அறிவதற்காக மீன் விற்பனை தொடர்பான சந்தைத் தரவுகள் திரட்டப்பட்டுள்ளன.

## விஷமிகளால் கிணற்று வாளி திருட்டு

யாழ். புனித மரியாள் பேராலயத்திற்கு அருகில உள்ள பொதுக் கிணற்றில் தண்ணீர் அள்ளப் பாவிக்கும் வாளி விஷமிகளால் களவாடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை இரவு மேற்படி கிணற்றில் வாளி பொறுப்பற்ற விஷமிகளால் களவாடப்பட்டுள்ளது. இதனால் குடிநீர் தட்டுப்பாடு நிலவும் ஐந்தாம் வட்டார மக்கள் மிகுந்த சிரமத்தை அனுபவிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

பொதுமக்களைப் பாதிக்கும் இவ்வகையான விஷம நடவடிக்கைகளைக் கைவிடுமாறு கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகச் செயலாளர் எஸ் யூடின் செய்திக் குறிப்பொன்று கேட்டுக் கொள்கிறது.

ஈழநாதம்

## நாடுதிரும்புகிறார்

கடந்த ஒன்பது மாதங்களாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். அலுவலகத்தில் கடமையாற்றிய சிக்கோ என்ற அதிகாரி அடுத்தவாரம் நாடு திரும்ப இருக்கிறார். இவருக்குப் பதிலாக புதிய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

# எதிர்க்கட்சிகள் பாதயாத்திரை நேற்றுக் கொழும்பில் ஆரம்பம்

[கொழும்பு]

அரசாங்கத்திற்கு எதிரான பாதயாத்திரை நேற்றுக் கொழும்பில் ஆரம்பமானது. விகாரமாதேவி பூங்காவிலிருந்து ஆரம்பித்துக் கதிர்காமத்தைச் சென்றடையும் இந்த யாத்திரையில் சுமார் 13 000 பேர் சேர்ந்து கொண்டனர். காலை 9 மணிக்குப் பாதயாத்திரை ஆரம்பமானது.

புத்த சிலைக்கு மாலை அணிவித்து ஆரம்பித்த இந்தப் பாதயாத்திரைக்கு எதிர்பார்த்த அளவு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசுதொடர்ந்து வட-கிழக்கில் போரை நடத்துவது, விலைவாசிகள் உயர்வு, அரசுக்கெதிரான மக்கள் படுகொலை செய்யப்படுவதும் மற்றும் அரசின் தனியார்மயப்படுத்தும் பொருளாதாரக் கொள்கை போன்ற செய்கைகளைக் கண்டிப்பது இப் பாதயாத்திரையின் முக்கிய நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அனுரா பண்டாரநாயக்கா கூறியது போல் சுமார் 15,000 பேர் இப் பாதயாத்திரையில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து கதிர்காமம் வரை 179 மைல் தூரமான இந்தப் பாதயாத்திரை ஏப்பிரல் முதலாம்திகதி கதிர்காமம் புனித நகரைச்சென்றடையும். நாளொன்றுக்குசுமார் 15மைல் தூரம் பாதயாத்திரிகர்கள் நடப்பார்கள் என்று அமைப்பாளர் தரப்பில் சொல்லப்படுகிறது.

## பாரிய மாடிக் கட்டடங்களை கட்டவேண்டாம்எனபணிப்பு

[கொழும்பு]

மத்திய வங்கி மற்றும் அரச நிறுவனங்கள் கட்டவிருந்த பாரிய மாடிக் கட்டடத் திட்டங்களை கைவிடுமாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பணித்துள்ளார். வீண் செலவினங்களைக் குறைக்கும் நோக்கமே இந்த நடவடிக்கை.

மத்திய வங்கி இரண்டு பில்லியன் ரூபா செலவில் ஒரு மாடிக் கட்டடத்தைக் கட்டவிருந்தது இதற்கான கேள்விப் பத்திரத்தை ஜெர்மன் சுப்லின் நிறுவனத்திடமிருந்து மத்திய வங்கி கோரியிருந்தது.

பாதுகாப்பு செலவினங்கள் அதிகரிப்பு, தேயிலை விலை வீழ்ச்சி ஆகிய காரணங்கள் அத்தியாவசியமற்ற செலவுகளைக் குறைக்க அரசாங்கம் முடிவெடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகனங்களை உபயோகிப்பதிலும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் திணைக்களங்களும், அமைச்சுகளும் மேலதிக வாகனங்களை விற்பதாக அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஆசிரியர் ஓவியப்போட்டியும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

அனைத்துப் பாடசாலை ஆசிரியர்களினதும் ஓவியப் போட்டியும் - கண்காட்சியும் வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்வித்திணைக்களத்து மாநாட்டறையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அதிபர்களும், பாடசாலை ஆசிரியர்களும், சித்திரப்பாட ஆசிரியர்களும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் (சித்திரம்) ஆ. தம்பித்துரை கோரியுள்ளார்.

### இனவெறிக்கு இடமளிக்காமல்

## கட்டுக்கோப்பை பலப்படுத்துவோம்

### - தொண்டமான்

(நுவரெலியா)

இன, மதவெறி சக்திகளுக்கு இடங்கொடுக்காமல் எமது கட்டுக்கோப்பைப் பலப்படுத்துவோம் என்று நுவரெலியாவில் நடைபெற்ற இ.தொ.காவின் பேராளர் மாநாட்டில் பேசிய அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், தோட்டப் பகுதியில் பிறந்து வளர்ந்த இந்திய சமுதாயம் இந் நாட்டின் தேசிய நீரோட்டத்தில் கலந்து விடாதவாறு சதி செய்ய சமய இனவெறி சக்திகள் இந்திய விரோத சக்தியாக மீண்டும் உருவாகிச் செயற்படுகின்றன. இந் நிலையில் தொழிலாளர் காங்கிரஸ் அதன் கட்டுக் கோப்பையும், பலத்தையும் மீண்டும் உறுதிப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

## மீனவரைக் காணவில்லை வள்ளம் தரை ஒதுங்கியது

(குருநகர்)

கடந்த சனியன்று குருநகரில் இருந்து பாலைதீவுப் பகுதிக்குச் சென்று திரும்பி வராத றோகான் என்பவரது மீன்பிடிவள்ளம் பாலாவிக் கரையில் தரைதட்டி நிற்பதாக உரிமையாளருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

வள்ளத்தில் சென்றவர்களான சூசைப்பிள்ளை சூரி (வயது 27) மத்தியாஸ் சுக்குட்டி (வயது 25) பொன்னுத்துரை ஜான்சன் (வயது 24) ஆகிய தொழிலாளிகள் கடற்படையினரால் நையப்புடைக்கப்பட்டபின்னர் விடுவிக்கப்பட்டதாகவும்

எடுத்துச் செல்லப்பட்ட தொழில் உபகரணங்கள் கடலில் அள்ளி வீசப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை குருநகரில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை சென்ற வள்ளத்தில் சென்றவர்களான மூன்று மீனவர்களின் நிலைமையும் வள்ளத்தைப்பற்றிய தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை. (21)

# புலிகளை உடன் தடை செய்க; தமிழக இ.காங்கிரஸ் கோரிக்கை

(சென்னை)

நாட்டின் நலன் கருதிக் குறிப்பாகத் தமிழக நிலைமையைக் கருத்திற் கொண்டு புலிகள் இயக்கத்தை உடனடியாகத் தடை செய்ய வேண்டும் என்று மாநில சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

நேற்றுப் பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு அவர் பேசுகையில், விடுதலைப்புலிகள் வெளிநாட்டிலிருந்து நாட்டுக்குள் வந்து இங்குள்ள பிரிவினைவாதிகளை தூண்டிவிட்டுத் தூபம் போடுகிறார்கள் என்றார். ஆகையால் மத்திய அரசு இதனைத் தடை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்ட பாலசுப்பிரமணியம், இதுவே இந்திரா காங்கிரஸின் கொள்கையாகும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடைசெய்வது குறித்து அரசு ஆராய்ந்து வருவதாக உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான்ராஜ்யசபாவில் நேற்றுமுன்தினம் குறிப்பிட்டார்.

## தேயிலைத் தோட்டங்களுக்கு விஷமிகளால் தீவைப்பு

(அவிசாவலை)

எட்டியாந்தோட்டை, ரூவான்வெல, தெரணியாகலை ஆகிய இடங்களிலுள்ள தேயிலை, றப்பர் தோட்டங்களுக்குத் தீ வைக்கும் விஷமிகளைப் பற்றி அவதானமாக இருக்கும் படி அவிசாவலைப் பொலிஸ் எச்சரித்துள்ளது.

சில தினங்களுக்கு முன்பு இப் பகுதியில் தோட்டங்கள் திடீரென்று தீப்பற்றிக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

தீவைக்கும் விஷமிகளைக் கண்காணிக்கும் நோக்கத்துடன் தோட்டத்துரைமார் தேயிலை, றப்பர் தோட்டங்களில் விழிப்புக் குழுக்களை நிறுவி வருகின்றனர்.

### யாழ்: மாவட்ட

## விளையாட்டு அபிவிரு. குழு உதைபந்தாட்டப் போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வலி கிழக்கு பிரிவுக்கான இன்றைய போட்டியில் ஈச்ச...

உள்ளது. இப் போட்டி யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் பி. ப. 3 00 மணிக்கு ஆரம்பமாகும்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற போட்டியில் பல்கலைக் கழக அணி திறமையாக விளை...

## ஐக்கிய கழக பணிமனை நாளை திறப்பு

அரியாலை கண்டிவீதி மாம்பழம் சந்திக்கு அருகாமையில் இருக்கும் இலக்கம் 384 இல் அமைந்திருக்கும் அரியாலை ஐக்கிய கழக பணிமனை நாளை புதன்கிழமை (18-3-92) பிற்பகல் 5-30 மணியளவில் காவல்துறைப் பொறுப்பாளர் திரு பா. நடேசன் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்விழாவில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு அரியாலை ஐக்கிய கழக நிர்வாகிகள் கேட்டுள்ளனர்.

## சிறில.விலிருந்து வடகிழக்கு பிரிக்க முடியாத பகுதியாம்

(கொழும்பு)

வடக்கும், கிழக்கும் சிறி...

வடபகுதியிலிருந்து வந்துள்ள பெரும்பாலான தமிழர்கள்...

### வடமராட்சிமீது

வட்டமிட்ட இரண்டு பொம்மர்கள் வீசிய குண்டினால் இரண்டு வீடுகள் சேதமடைந்ததுடன் பல தென்னைமரங்களும் அழிந்துள்ளன. இதனைத் தொடர்ந்து காலை 7 மணிக்கு வல்வெட்டித்துறைப் பகுதியை வட்டமிட்ட இரண்டு விமானங்கள் ஆலடிப் பகுதியில் வீசிய குண்டினால் மு. அமிர்தலிங்கம் (34) என்பவர் படுகாயமடைந்துள்ளார். இவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரது வீடு உட்பட மூன்று வீடுகள் சேதமடைந்தன.

மீண்டும் 7.10 ற்கு பருத்தித்துறை முனைப்பகுதிக்கு வந்த பொம்மர்கள் மூன்று குண்டுகளை வீசின இக் குண்டுகள் முன்னர் தாக்குதலுக்குள்ளான வீடுகளின் மீதே குறி வைத்து வீசப்பட்டன.

அடுத்து 7.15 ற்கு வல்வெட்டித்துறை பகுதிக்கு வந்த விமானங்கள் முன்னர் தாக்கிய வீடுகள் மீது...

...ளப்பட்டது. இத்தாக்குதல்களினால் இரண்டு வாகனங்கள் மோட்டார் சைக்கிள் உட்பட பொது மக்களின் சொத்துக்கள் பல பலத்த சேதமடைந்ததுடன் அமிர்தலிங்கம், கணேசலிங்கம், சக்திவேல், உதயகுமார். மாணிக்கரத்தினம், கிட்ணபிள்ளை, கந்தசாமிதுரை ஆகியோரது வீடுகளும் சேதமடைந்தன. தொண்டமனாறு காட்டுப்புலம் பகுதியில் வீசிய குண்டுகளினால் வடிவேல், சாந்தலிங்கம், ஞானகுரு சந்திரன், ஞானேஸ்வரி, சிறீதரன், திருநாவுக்கரசு, ஜெயக்குமார் ஆகியோரது வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

### கடற்படை தாக்குதல்:

வல்வெட்டித்துறை கடற்பகுதிக்கு விரைந்து வந்த கடற்படையின் ஏழு கடற்படைப் பீரங்கிப் படகுகள் வல்வெட்டித்துறையின் கரையோரப் பகுதிகளைக் குறியாகக் கொண்டு தொடர்ச்சியான பீரங்கித்தாக்குதல்களை மேற்...

பீரங்கித் தாக்குதல் 11.45 மணிவரை நீடித்தது. இத்தாக்குதலில் வீரசூரியா, தாய்க்கப்பல் உட்பட ஏழு பீரங்கிப் படகுகள் ஈடுபட்டன. இதன்போது இரண்டு உலங்குவானூர்திகள் வானில் வட்டமிட்டு இக்கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கிய வண்ணமிருந்தன.

### எறிகணைத்தாக்குதல்

இதேவேளை பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வல்வெட்டித்துறைப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதல்கள் காலை 10 30 மணிக்கும் மாலை ஏழு மணிக்கும் மேற்கொள்ளப்பட்டன. இதனால் வீடொன்றும், கடையும் சேதமடைந்தன. [ச]

### ஆறுதமிழ்

இவர்கள் தீவிரவாதிகளுக்கு உணவுப் பொருட்களை கொண்டு செல்லும் போது...

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வலி கிழக்கு பிரிவுக்கான இன்றைய போட்டியில் ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோத உள்ளது. இப் போட்டி யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் பி. ப. 3 00 மணிக்கு ஆரம்பமாகும்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் பல்கலைக்கழக அணி திறமையாக விளையாடி 15-0 கோல் கணக்கில் புத்தூர் வளர்மதி அணியை வெற்றிபெற்றது. நேற்று நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் நாவாந்துறை சென் நிக்கலஸ் அணி நாவாந்துறை கலைவாணி அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

## முத்தமிழ் விழா

வகைகளும்; மன்னார் பிரதேசத்தில் ஆடப்பட்டு வருகின்ற மாதோட்டப் பாங்கு, வடபாங்கு என்பனவும்; வன்னிப் பிரதேசங்களின் கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்து ஆகியனவும்; காமன் கூத்து, அருச்சுனன் தபசு ஆகிய மலையகத்தின் பாரம்பரிய கலை நிகழ்வுகளும்; யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஆடப்பட்டு வருகின்ற வடமோடி, தென்மோடி, காத்தவராயன் மற்றும் இசை நாடகங்கள் ஆகியன மரபுவழி நாடகங்கள் பிரிவில் இடம்பெறலாமெனவும்

மரபுவழி சாராத நாடகங்கள் பிரிவில் சரித்திரப் பாங்கான நாடகங்களும், சமூகப் பாங்கான நாடகங்களும் இடம்பெறவேண்டுமென நாடகக்குழுவினர் அறிவித்துள்ளனர்

மேடையேற்றப்படவுள்ள நாடகங்கள் ஒரு மணி நேரத்திற்குள் இடம் பெறக்கூடிய விதத்தில் ஆக்கப்படுதல் வேண்டும் என்றும், நாட்டிய நாடகங்கள் நாற்பத்தைந்து நிமிட நேரத்திற்குள் இடம்பெறக் கூடிய விதத்தில் ஆக்கப்படலாம் என்றும்,

முத்தமிழ் விழாவில் தத்தம் நாடகங்களை மேடையேற்ற விரும்பும் நாடகத்துறை சார்ந்த கலைஞர்கள், மன்றங்கள் நாடக எழுத்துப் பிரதிகளை 'முத்தமிழ் விழாப் பொறுப்பாளர்', விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம், தலைமைச் செயலகம், கோண்டாவில், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு 15.-04.-92 க்கு பிந்தாமல் அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# தாயகம் திரும்பியோர் பேசாலை முகாமில் கைது

தமிழ் நாட்டிலிருந்து தாயகம் திரும்பிய தமிழ் அகதிகளில் ஒன்பது பேர் பேசாலை அகதி முகாமில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என வன்னி மாவட்ட பா. உ. அன்ரனி இமானுவல் சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்களில் ஏழுபேர் பின்பு விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் இருவர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் இவ்வாறான நடவடிக்கைகள் நாடு திரும்பிய அகதிகள் மனதிலும் நாடு திரும்பாத அகதிகள் மனதிலும் பெரும் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது என மேலும் அவர் தெரிவித்தார்.

பேசாலையில் மன்னார் பொலிஸ் நிலைய தாக்குதல், மன்னார் கோட்டைத் தாக்குதல் என்பன தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளுக்கு

துருப்புகளின் கையில் வீழ்ச்சியடைந்த பின்னர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அமைதிப் படைத் தலைமைப்பீடம் விரும்பியது ஆனால் றோவின் ஆலோசனையில் செயற்பட்ட அரசியல் தலைமை புலிகளுடன் சமரசத்தை விரும்பவில்லை புலிகள்மீது பழிவாங்கும் நோக்கமே மேலோங்கி நின்றது. ''புலிகளுக்கு நல்லதொரு பாடம் கற்பிக்கவேண்டுமென அரசியல் தலைமை விரும்பியது. ஆனால் யார் யாருக்கு பாடம் கற்பித்தார்கள் என்பதை வரலாறுதான் சொல்லும்'' இவ்வாறு ஜெனரல் திபேந்தர் சிங் இந்நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

# சிறில.விலிருந்து வடகிழக்கு பிரிக்க முடியாத பகுதியாம்

(கொழும்பு)

வடக்கும், கிழக்கும் சிறிலங்காவின் பிரிக்கமுடியாத பகுதிகள் என்றும் அவை எந்தவொரு தனி இனத்துக்கும் மட்டும் உரிமையுடையவை அல்ல என்றும் மடிகே பந்நாப்த தேரோ வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் வடபகுதியிலிருந்து வந்துள்ள பெரும்பாலான தமிழர்கள் சிறிலங்காவின் ஏனைய பகுதிகளில் வீடுகள் மற்றும் சொத்துக்கள் வாங்குவதை சிங்களவர் எதிர்க்கவில்லை என்றும் அதைத் தடுத்து நிறுத்தும்படி அரசை எவரும் கோரவில்லை என்றும், சுட்டிக்காட்டியுள்ளார். எனவே நிலமற்ற எவரும் சிறிலங்காவின் எப்பகுதிக்கும் சென்று குடியேறி வாழ அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமெனவும் கோரியுள்ளார்.

## லக்ஸ்பிறே கிலோ 2 ரூபா குறைவு

ஒரு கிலோ கிராம் லக்ஸ்பிறே பால்மாவின்விலை வியாழக்கிழமை நள்ளிரவிலிருந்து இரண்டு ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லங்கா மில்க்பூட் கம்பனி மக்கள் மயமாக்கப்பட்டதன் நேரடி விளைவே இதுவென்று உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

## வடமராட்சியில்

இவர்களுக்கான தங்குமிட வசதிகளையும், உணவு வகைகளையும் வழங்குவதில் அந்தந்த பகுதி பொதுமக்களும், தொண்டர் நிறுவனங்களும் விடுதலைப்புலிகளும் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. (ச)

## நாய்களை அழிக்க திட்டம்

பருத்தித்துறை பிரதேச சபைப்பகுதியில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பருத்தித்துறை பிரதேச சபையும், சுகாதாரத் திணைக்களமும் இணைந்தே இக்கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (25)

## தலைவர்

கூறப்படுகிறது பல தேசிய இனங்களை வலுக்கட்டாயமாக இறுகப்பிடித்து தனது ஆதிக்கத்தின்கீழ் வைத்திருந்து சோவியத் சாம்ராஜ்யம் உடைந்து விழுந்ததுபோல இந்திய சாம்ராஜ்யமும் பிளவுபட்டு வீழும் காலம் தூரத்தில் இல்லை எனவும் நக்சல்பாரி இயக்கம் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுக்கு சார்பாக தமிழ் நாட்டில் தலைதூக்கிவரும் தமிழ்த் தேசியவாத எழுச்சி ஜெயலலிதா அரசுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருப்பதாகவும் இதன் காரணத்தினாலேயே புலிகளை தடை செய்ய வேண்டுமென அ. தி மு. க அரசியல் வாதிகள் குரலெழுப்பி வருவதாகவும் இப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

களை வீசின இக் குண்டுகள் முன்னர் தாக்குதலுக்குள்ளான வீடுகளின் மீதே குறிவைத்து வீசப்பட்டன.

அடுத்து 7.15 ற்கு வல்வெட்டித்துறை பகுதிக்கு வந்த விமானங்கள் முன்னர் தாக்கிய வீடுகள் மீது குண்டுகளை வீசின தொடர்ந்து 9.55 ற்கு வல்வெட்டித்துறை சந்தைப் பகுதியில் மக்கள் கூடியிருந்தவேளை குண்டுகளை வீசின இதனால் சந்தைக்கு முன்பாக இருந்த வீடொன்று பலத்த சேதமடைந்தது இதில் ஆ சிறிதரன் (வயது 20) ச சந்திரகுமார் (வயது 22) மற்றும் உடுப்பிட்டியைச் சேர்ந்த ச. அருணாசலம் (வயது 65) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இறுதியாக 10-30ற்கு வல்வெட்டித்துறை தொண்டமனாறு பகுதிகளை வட்டமிட்ட நான்கு பொம்மர்களும் இரண்டு அவ்ரோ ஆகியனவும் தொடர்ச்சியாக பத்திற்கு மேற்பட்ட குண்டுகளைவீசின. இதன்போது சீ பிளேனிலிருந்து இப்பகுதிகள் மீது றொக்கற் தாக்குதல் மேற்கொள்

வல்வெட்டித்துறை கடற் பகுதிக்கு விரைந்து வந்த கடற்படையினர் ஏழு கடற்படைப் பீரங்கிப் படகுகள் வல்வெட்டித்துறையின் கரையோரப் பகுதிகளைக் குறியாகக் கொண்டு தொடர்ச்சியான பீரங்கித்தாக்குதல்களை மேற்கொண்டன. காலை 10 30 மணிக்கு ஆரம்பமான இப்

றும், கடையும் சேதமடைந்தன. [ச]

## ஆறுதமிழ்

இவர்கள் தீவிரவாதிகளுக்கு உணவுப்பொருட்களை கொண்டு செல்லும் போது பிடிக்கப்பட்டார்கள் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.


# வெளிவந்துவிட்டது

ஈழநாதம் வெளியீடான

# காலமும் கோலமும்

ஓவியர் தயாவின் கருத்தோவியங்கள்

கிடைக்குமிடம் :-

தென்மராட்சியில்

பரம்ஸ் சாவகச்சேரி

அருள்நாயகி புத்தக சாலை

கொடிகாமம்.



உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பிரசோற்பத்தி ஆண்டு பங்குனித் திங்கள் 5ஆம் நாள் (18-03-1992) புதன்கிழமை முற்பகல் 10-45 மணி முதல் 11-35 மணி வரையுள்ள இடப லக்கின சுப முகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது புத்திரன் திருவளர் செல்வன்<br>**யோகேஸ்வரன்**<br>[உரிமை: நியூ லலிதா ஜுவல்லர்ஸ் யாழ்ப்பாணம்)<br>அவர்களுக்கும் | எமது புத்திரி திருவளர் செல்வி<br>**சுபாஜினி**<br>அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமாங்கல்ய தாரண வைபவத்தில் தாங்கள் தங்கள் சுற்றஞ் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: அன்றுமாலை 4-00 மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி செ. பேரம்பலம்
52/2, வைமன் றோட்,
நல்லூர்.
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி செ. சிவபாதலிங்கம்
(செல்லையா சிவபாதலிங்கம் ஜுவல்லர்ஸ்)
218H, 191H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

சி/4062



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ' ஈழநாதம் ' பணிமனையில் 1992 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.